# கிறிஸ்துவின் அளவு

Translated from the original article, "The Measure of Christ"

By *T.Austin-Sparks*

*"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே..."* (கொலோ. 1:27). இந்த வசனத்தின் அற்புதமான சத்தியத்தின் முழுமையான உட்கருத்தைப் புரிந்துகொள்ள முழு வசனத்தையும் கொஞ்சங்கொஞ்சமாக, பகுதிபகுதியாக, கவனமாக வாசியுங்கள். "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் இரகசியம் இன்னதென்று, தேவன்... தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." *கிறிஸ்து* உங்களில் இருப்பதே மகிமையின் ஐசுவரியம்!

"இயேசு கிறிஸ்து உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா?" (2 கொரி. 13:5). அப்போஸ்தலனாகிய பவுல் எந்தக் காரணமும் இல்லாமல் இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை; "*உங்களை ம்ங்களே* அறியீர்களா?" கிறிஸ்து உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று உங்களுக்குத் தெரியாதா? இந்த அற்புதமான காரியம் உங்களுக்குத் தெரியாதா?

"என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்" (கலா. 4:19). "கிறிஸ்து உங்களுக்குள் உருவாகும்வரை;" இது ஒரு முன்னேறிய படி.

"தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:29). அற்புதமான வார்த்தைகள்! இப்படிச் சொல்வதற்கு எந்த மனிதனுக்கும் துணிவு வராது; பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டினால்தான் இந்த வார்த்தைகள் இங்கு எழுதம்பட்டிருக்கின்றன.

"கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கம்பட்டிருக்கிறது...நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்" (எபே. 4:7, 13). "கிறிஸ்துவினுடைய நிறைவின் அளவு."

நாம் உடனடியாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலும், இயேசுகிறிஸ்துவின்மேலும் நம் முழுக் கவனத்தையும், எல்லாவற்றையும் குவிக்க விரும்புகிறோம்; ஏனென்றால், அவர்தான் இங்கு காட்சியில் இருக்கிறார், குறிக்கோளாக இருக்கிறார். இங்கு நமக்குமுன்பாக இருப்பது ஏதோ போதனையோ அல்லது சத்தியமோ இல்லை; அதாவது சத்தியத்தைப்பற்றிய அறிவை இன்னும் அதிகமாகப் பெற்றுக்கொள்வதல்ல; நமக்குமுன்பாக இருப்பது சேவையும் இல்லை; நமக்குமுன்பாக இருப்பவர் கர்த்தரே.

தம் குமாரனாகிய கர்த்தராகிய இயேசு எல்லாவற்றையும் நிரப்ப வேண்டும், எல்லாம் கிறிஸ்துவைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும் என்பதே முதலிலிருந்து கடைசிவரை பிதாவின் நோக்கமாகும். ஒரு காரியத்தில் எந்த அளவுக்குக் கிறிஸ்து வெளியரங்கமாக்கப்படுகிறார் என்பதின்படிதான் தேவனுடைய பார்வையில் அதற்கு எந்த அளவுக்கு மதிப்பு உண்டு என்பது கணக்கிடப்படுகிறது. *தேவனுடைய பார்வையில் எல்லாவற்றின் மதிப்பும் அதில் கிறிஸ்து எந்த அளவுக்கு வெளியரங்கமாக்கப்படுகிறார் என்பதையே சார்ந்திருக்கிறது.* அந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் தேவன் எல்லாவற்றின் முக்கியத்துவத்தையும் தீர்மானிக்கிறார்.

நாம் நம் முழுக் கவனத்தையும் அதில் குவித்துவிட்டால், அது ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்; நிறையக் காரியங்கள் போய்விட வேண்டியிருக்கும்; ஏனென்றால், அவை கர்த்தராகிய இயேசுவை வெளியரங்கமாக்குவதில்லை, வெளியாக்குவதில்லை. பிதாவானவர் கர்த்தராகிய இயேசுவையே தம் கண்களுக்குமுன்பாக வைத்திருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; பிதாவின் கண்கள் முழுவதும் ஒரேவொரு நபரால், அதாவது அவருடைய நேச குமாரனால், மட்டுமே நிறைந்திருக்கிறது; தேவனுடைய பார்வையில், எல்லாவற்றின் மதிப்பும் அதில் எந்த அளவுக்கு அவருடைய குமாரன் வெளியரங்கமாக்கம்படுகிறார், வெளியாக்கப்படுகிறார், மகிமைப்படுத்தப்படுகிறார் என்பதால் மட்டுமே தீர்மானிக்கம்படுகிறது; அதுவே அவருடைய இலக்கு, அதுவே அவருடைய குறிக்கோள்.

## கிறிஸ்துவின் அனைத்தும் அடங்கியநிலை

கிறிஸ்து இல்லாமல் ஆவிக்குரிய சேவையோ, தரிசனமோ, அழைப்போ, மகிமைப்படுத்தப்படுதலோ இருக்க முடியாது; அவைகளெல்லாம் ஏதோ தனிம்பட்ட காரியங்கள் இல்லை; கர்த்தராகிய இயேசு என்ற நபரில்தான் அவைகள் இருக்க முடியுமேதவிர, அவரில்லாமல் தனியாக இருக்க முடியாது.

பலரைம் பொறுத்தவரை, இரட்சிப்பு என்பது ஒரு காரியம். அதைத் தனியாகப் பிரித்து, அதை ஏதோ வொன்றாக அநேகர் கருதுகிறார்கள். இரட்சிப்பு என்பது அதைப் பெற்றுக்கொள்பவர்களின் நன்மைக் காக அதனால் கொடுக்கம்படுகிற ஏதோவொன்று என்று அநேகர் நினைக்கிறார்கள். பரிசுத்தமாக்கப் படுதலும் அப்படித்தான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இரட்சிப்பும், பரிசுத்தமாக்கப்படுதலும் நபர்கள் சம்பந்தப்பட்ட காரியம்; எனவே, அவை அவர்களுக்கு ஏதோவொரு காரியம் என்று நாம் நினைக்கிறோம். நாம் இவைகளை நபர்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறோம். ஆனால், கிறிஸ்துவே இரட்சிப்பு, கிறிஸ்துவே பரிசுத்தமாக்கப்படுதல். இரட்சிப்பாகவும், பரிசுத்தமாக்கப்படுதலாகவும் அவர் நமக்குள் இருக்கிறார்.

சேவையையும், அழைப்பையும் பொறுத்தவரையிலும் இதுவே உண்மை. இவைகளையும் நாம் பெரும் பாலும் மனிதர்களைச் சம்பந்தப்படுத்திப்பார்க்கிறோம். “சேவிப்பதற்காக இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்,” என்பது சத்தியத்தின் ஒரு பகுதி மட்டுமே; இது ஆபத்தான ஒரு கோஷம். ஏனென்றால், சேவைதான் பெரும்பாலும் உள்நோக்கமாக இருக்கிறதேதவிர, கர்த்தர் அதின் உள்நோக்கமாக இல்லை. சேவிக்க வேண்டும் என்ற நோக்கத்தால் நீங்கள் எந்த அளவுக்கு உந்தித்தள்ளப்படமுடியும் என்றால் கர்த்தரை விட்டுவிடுவீர்கள். கர்த்தரை விட்டுவிடக்கூடிய அளவுக்கு அந்த நோக்கத்தால் நீங்கள் தூண்டப்பட முடியும். நாம் சேவை என்ற காரியத்தை கிறிஸ்து என்ற நபரிலிருந்து தனியாகப் பிரித்துவிட்டோம். “சேவை” என்ற கோரிக்கைகளை நாம் இறுகப்பிடித்துக்கொண்டு, அதில் முழுவதும் மூழ்கிவிட்டதை நாம் காண்கிறோம்; அது சேவைசெய்வதற்கான தூண்டுதலாக மாறிவிடுகிறது; கடைசியில், அது நம்மை உடைத்துவிடுகிறது. மேலும், சேவிப்பது கடினமாக மாறும்போது, கஷ்டமாக மாறும்போது, “சரி, எல்லாவற்றையும் விட்டுவிடுவோம்,” என்று கூறி, கைகழுவிவிடுவோம்; நாம் சேவையை கிறிஸ்து என்ற நபரிலிருந்து தனியாகப் பிரித்துவிட்டோம் என்பதையும், வேலை என்ற காரியத்தால்தான் நாம் தொடர்ந்து நாள்தோறும் ஆக்கிரமிக்கம்பட்டிருக்கிறோமேதவிர கர்த்தர் என்ற நபரால் நாம் ஆக்கிரமிக் கப்படவில்லை என்பதையுமே இது நமக்குக் காண்பிக்கிறது.

மகிமைப்படுத்தப்படுதல் என்ற காரியத்திலும் இதுவே உண்மை. இந்தக் காரியம் நம்மைக் கிளர்ந் தெழப்பண்ணுகிறது. நாம் மகிமைப்படுத்தப்படப்போகிறோம் என்பதைப்பற்றிய பாடல்கள் பாடுவதை நாம் விரும்புகிறோம். ஆனால், அது இப்போது ஆரம்பிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அது இப்போதே ஆரம்பிக்க வேண்டும். மகிமைப்படுத்தப்படுதல் என்றால் என்ன? இயேசுகிறிஸ்து நம் மில் முழுமையாக வெளியரங்கமாவதே மகிமைப்படுத்தப்படுதலாகும். தம் குமாரனோடு உள்ள தொடர் பில்தான் தேவன் இரட்சிப்பையும், பரிசுத்தமாக்கப்படுவதையும், அழைப்பையும், சேவையையும், மகிமைப்படுத்தப்படுவதையும் மதிக்கிறார். குமாரன் இல்லாமல் அவைகளுக்கு எந்த மதிப்பும் இல்லை; அவரே இரட்சிப்பு, அவரே பரிசுத்தமாக்கப்படுதல், அவரே மகிமைப்படுத்தப்படுதல், அவரே எல்லாம்.

இரட்சிப்பும், மகிமைப்படுத்தப்படுதலும் மக்களுடைய நன்மைக்காக அவர்கள் பெற்றுக்கொள்ள வேம் டிய காரியங்கள் என்பதுபோல் பெரும்பாலும் அவர்களுக்குக் காட்டம்படுகின்றன; தாங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய *ஏதோவொன்றிலிருந்து* அவர்கள் அனுகூலம் பெறவேண்டும் என்பதுதான் அவர் களுடைய நோக்கம். பெரும்பாலும் இரட்சிப்பை இரட்சிப்புக்காகத்தான் பெற்றுக்கொள்ளுகிறார்கள். தேவன் எந்தவோர் ஆத்துமாவையும் இரட்சிப்புக்காகவென்று இரட்சிக்கவில்லை. இரட்சிப்புதான் இறுதி யான நோக்கம் என்பதுபோல் தேவன் இரட்சிப்பின்பின்னால் ஓடவில்லை; மாறாக, இரட்சகர்நிமித்தம், தம் குமாரனின் மகிமைக்காக அவர் இரட்சிம்பைத் தேடுகிறார். குறிக்கோள் அல்லது நோக்கம் இரட்சிப் பல்ல; மாறாக, இரட்சகர்தான் குறிக்கோள், நோக்கம். இரட்சிப்பு என்பது தங்கள் சொந்த அனுகூலத்திற் காகத் தாங்கள் பெற்றுக்கொள்கிற ஏதோவொன்று என்று நினைத்து மக்கள் வெறுமனே அதில் மகிழ்ந்து கொண்டிருந்தால், முழு நோக்கமும் முதல் படியிலேயே அவர்களுடைய கம் களுக்கு மறைவாகம் போய்விடும். தேக்கத்திற்கும், தடைக்கும், தடங்கலுக்கும் இது காரணம் இல்லையா?

தன் வேலையின் விளைவாக எந்த ஆழமான நிறைவையும் காணாமல், "என்னால் ஒன்றும் செய்ய முடியாது," என்று கதறும் நிலைமைக்கு ஊழியக்காரர் கொண்டுவரப்பட வேண்டும். அப்போது, அவர் இரட்சிப்பின் உண்மையான தன்மையையும், இன்னோர் ஆத்துமாவை இரட்சிப்பது முற்றிலும் தனக்கு அப்பாற்பட்டது என்பதையும், அது தேவனுடைய வேலை என்பதையும் பார்க்க ஆரம்பிக்கிறார். எனவே, அவர் இரட்சிப்பில் தேவனுடைய நோக்கத்தைப் பார்க்க ஆரம்பிக்கிறார்; அவருடைய குமாரன் மகிமைப் பட வேண்டும் என்பதே இரட்சிப்பில் தேவனுடைய நோக்கம். இரட்சிப்பு என்பது *ஏதோவொரு காரியம்* அல்ல; மாறாக, அது கிறிஸ்து என்ற *நபரின்* வல்லமையான வருகையாகும். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" (1 யோவான் 5:12). "அவரைப் பெற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களும்..." (யோவான் 1:12).

பரிசுத்தமாக்கப்படுதல், சேவை ஆகியவைகளின் காரியத்திலும் இதுவே உண்மை. நமக்குள் வாசம் பண்ணுகிற கிறிஸ்துதான் வேலைக்காரர் என்ற தளத்தில் செய்யப்படாத எந்த சேவையும் தேவனுடைய குறிக்கோளை நிறைவேற்ற முடியாது; ஏனென்றால் தேவனுடைய ஆவியால் கர்த்தராகிய இயேசு வால் மட்டுமே தேவனுடைய வேலையைச் செய்ய முடியும். ஆம், உங்களால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாத சேவையில் ஒரு வேலைக்காரனாக இருக்க நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். சேவை என்பது கர்த்தராகிய இயேசுவை வெளியே காட்சிக்குள், வெளியரங்கத்துக்குள், கொண்டுவருவதாகும். இதைச் செய்யாத எந்த சேவையும் பரிசுத்த ஆவியானவரின் வேலை இல்லை. மாறாக, அது தேவ னுடைய நோக்கத்தை நிறைவேற்றாத மனிதனுடைய சேவையாகும்; அது அக்கினியால் பரிசோதிக் கப்பட்டு மதிப்பற்றது என்று நிரூபிக்கப்படும்.

கிறிஸ்தவம் என்பது ஓர் உபதேசம் இல்லை; இது சத்தியத்தை சத்தியமாக அறிந்துகொள்ளுகிற விஷ யம் இல்லை; மாறாக, அது ஒரு நபரைப்பற்றிய அறிவாகும்; அது கர்த்தராகிய இயேசுவை அறிவதாகும். ஒருவருக்குக் கல்வி கற்பித்து அவரை ஒரு கிறிஸ்தவனாக மாற்றமுடியாது. கிறிஸ்தவம் என்பது உள்ளாக ஒரு நபரைம்பற்றி அறிகிற அறிவாகும்; அவரை நமக்குள் வசிப்பவராக அறிவதாகும்.

### கிறிஸ்துவின் உலகளாவியநிலை

*தேவன் ஒரு நபரைக் குறிப்பாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்; தெரிந்தெடுத்து தெய்வீகப் பரிபூரணம் எல்லாவற்றையும் அந்த நபருக்குள் கூட்டிச்சேர்த்திருக்கிறார்; எல்லாமே பிரிக்கமுடியாத அளவுக்கு அவருடைய குமாரனுக்குள் பொதிந்துவைக்கப்பட்டிருக்கிறது. அவர் நித்தியத்தின் சகல நிறைவையும், பிரபஞ்சத்தின் சகல நிறைவையும் அந்த நபருக்குள் வைத்து, சகல நிறைவையும் அவருக் குள் பொதிந்துவைத்திருக்கிறார். அவரில்லாமல் அவருக்கு வெளியே ஒரு துணிக்கையைக்கூட, ஒரு சிறிதளவைக்கூட அனுபவிக்கமுடியாது; சிருஷ்டிப்பின் தனிச்சிறப்புக்களை விரித்துரைக்கக்கூடியது அவரில் இருக்கிறது. கிறிஸ்துவின் நிறைவு முழு அளவில் வெளியாக வேண்டும் என்பதே தேவன் முன்குறித்த நோக்கமாகும்—"எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபை"* (எபே. 1:23).

பிரபஞ்சத்தின் ஒவ்வொரு மூலையும் இயேசுகிறிஸ்துவைப்பற்றி சத்தமாகப் பேசும்; அப்போது ஓர் இடத் திற்குப் போனால் அல்லது ஒரு ஜீவனைத் தொட்டால் அங்கு கர்த்தராகிய இயேசுவின் வெளியாக் கத்தை நம்மால் காணாமல் இருக்க முடியாது.

"*கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்*"—இது பர லோகம். நீங்கள் கர்த்தராகிய இயசுேவின் பிரசன்னத்தில் நடக்கிறீர்கள். முழுப் பிரபஞ்சத்தையும் அது போல நினைத்துப்பாருங்கள்; அவருடைய குமாரன் நிறைவாக பிரபஞ்சம் முழுவதும் வெளியாக்கப் படுதல். கிறிஸ்து எல்லாவற்றையும் நிரப்புவார் என்பதும், எல்லாவற்றையும் பார்க்கும்போது அது *கிறிஸ்துவால் நிரம்பியிருக்கிறதைக்* காண முடியும் என்பதும்தான் தேவனுடைய கருத்தில் இருக்கிற நோக்கமாகும். எல்லாம் அவருக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கின்றன; புதிய சிருஷ்டிப்பில் எல்லாம் அவருடைய பிரசன்னத்தைப்பற்றிப் பேசும், அவருடைய சில குணாம்சங்களைக் காண்பிக்கும். இப் போதுகூட, ஒரு ஜீவனைத் தொடும்போது, அந்த ஜீவன் கர்த்தராகிய இயேசுவால் நிரம்பியிருப்பதை யும், கர்த்தராகிய இயேசுவே அந்த ஜீவனின் நிறைவாக இருப்பதையும் உடனே காணும்போது எப்பேர்ப் பட்ட சந்தோஷம் பிறக்கிறது! இது என்னே ஆசீர்வாதம்!

தேவன் ஒரு நபரைப் பிரத்தியேகமாகத் தெரிந்தெடுத்து, எல்லாரும் பார்ப்பதற்கு அவரை அவர் களுடைய கண்களுக்குமுன்பாக வைத்திருக்கிறார்; அவர் மனிதனாகிய கிறிஸ்து இயேசு.

**சபையின் உலகளாகியநிலை**

இலக்கியத்தைப்பொறுத்தவரை (ஆங்கிலத்தில்) நீங்கள் Aமுதல் Zவரைதான் போக முடியும், இதற்கு வெளியே போகமுடியாது. மொழியை (ஆங்கிலத்தை) Aயில்ஆரம்பித்து Zஇல் முடிக்கலாம். அது போல கிறிஸ்து இயேசுவே தேவனுடைய புதிய சிருஷ்டிப்பின் ஆதியும் அந்தமுமாவார்; அவரே தொடக்கமும் முடிவுமாவார். அவரே தொடக்கத்துக்கும் முடிவுக்கும் இடையேயுள்ள எல்லாமுமாவார்; உங்களால் அதற்கு வெளியே போக முடியாது. எதுவும் கிறிஸ்து இயேசுவுக்கு வெளியே இருப்பதாக நாம் ஒருபோதும் நினைக்கக்கூடாது; அவரே இரட்சிப்பு; அவரே பரிசுத்தமாக்கப்படுதல்; அவரே மீட்பு, ம்திப்படுத்தப்படுதல், சமாதானம், ஞானம், அன்பு, பரலோகம்; "இயேசு கிறிஸ்து உங்களுக்குள்ளே இருக் கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா?" *இந்த கிறிஸ்து* உங்களில் இருக்கிறார். நீங்கள் இதன் சாத்தியக்கூறுகளையும், இது எந்த அளவுக்குப்போக முடியும் என்பதையும் பார்க்கிறீர்களா?

தேவன் தம் பிரபஞ்சத்தை வெளியேயிருந்து அல்ல, மாறாக உள்ளேயிருந்து மறுசாயலாக்குவார். எப்படி? தம் பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகளுக்குள் இயேசுகிறிஸ்துவை வைப்பதின்மூலம்; அந்த நேரத்திலிருந்து அங்கு இருமடங்கு நடவடிக்கை இருக்கும்—விசுவாசி பரிசுத்த ஆவியானவ ரால் அவருடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்கப்படுவான், அவர் விசுவாசிகளுக்குள் உருவாக்கப்படுவார்; இவ்வாறு, அவர் தம் புதிய சிருஷ்டிப்பை உருவாக்கப்போகிறார்.

"*கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இரும்பதே* அந்த இரகசியம்" (கொலோ 1:27). "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்; அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக் கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" (1 யோவான் 5:11, 12).

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோமர் 8:9).

"கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:20, 21).

"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை... கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" (கொலோ. 3:10, 11).

"எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபை" (எபே. 1:23).

**அவருக்குள்ளாக வளர்தல்**

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஊக்கமாக முயற்சிசெய்து அல்லது அயராது உழைத்து அல்லது வெறு மனே சில குறிப்பிட்ட கோட்பாடுகளை நடைமுறைப்பழக்கத்திற்குக் கொண்டுவரப் பிரயாசப்பட்டு அல்லது ஒரு குறிப்பிட்ட அளவை எட்ட வேண்டும் என்று அரும்பாடுபட்டு வாழும் வாழ்க்கை அல்ல. மாறாக, ஆரம்பத்திலிருந்து கடைசிவரை, முழுக்க முழுக்க, இது *உள்ளாக* கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவைப்பற்றிய விஷயமாகும். நிச்சயமாக இதில் நாம் அவருக்கு மாறுத்தாரம் அளிப்பதும், நமக்குள் அவர் தம் ஆவியானவரால் கிரியைசெய்வதற்கு நாம் தொடர்ந்து விட்டுக்கொடுப்பதும், நம் மைத் தம் சாயலுக்கு ஒத்தசாயலாக்க வேண்டும் என்ற அவருடைய குறிக்கோளை நிறைவேற்ற அவருடன் ஒத்துழைப்பதும் அடங்கியிருக்கின்றன.

பிறந்ததிலிருந்து இதுவரை நாமெல்லாரும் வளர்ந்திருக்கிறோம். நாம் எப்படி வளர்ந்தோம். சும்மா உட்கார்ந்துகொண்டு, "நாம் நம் வளர்த்தியைக் கூட்ட வேண்டும், அதிகரிக்க வேண்டும்," என்று யோசித்துக்கொண்டேயிருந்ததால் நாம் வளர்ந்துவிடவில்லை; அல்லது "சரி, இன்றைக்குக் கொஞ்சம்

வளர்வோம். நாளைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக வளர்வோம்," என்று தீர்மானித்ததால் நாம் வளர்ந்துவிடவில்லை. நம்முடைய பரிமாணங்களை அதிகரித்துக்கொள்வதற்காக நாம் கஷ்டப்பட்டு வேதனையோடு உழைத்ததால் நாம் வளர்ந்துவிடவில்லை. இப்படிப்பட்ட காரணங்களால் நாம் வளர்ந்துவிடவில்லை. மாறாக, "நாம் சும்மா வளர்ந்தோம்!" ஆனால், நாம் "சும்மா வளர்ந்தபோது" வளர்ச்சியின் சட்டங்களுக்கு நாம் மறுமொழி கொடுக்கவேண்டியிருந்தது. அதுபோல, ஆவிக்குரிய மண்டலத்தில் உள்ள வளர்ச்சியின் சட்டங்களை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்; அங்கு வளர்ச்சியின் சட்டங்களுக்கு மறுமொழி கொடுக்கப்படவில்லையென்றால் அல்லது அவை மீறம்பட்டால், அங்கு எந்த வளர்ச்சியும் இருக்காது; மாறாக, வளர்ச்சி தடைபடும், பலவீனமும், இழப்பும் ஏற்படும்.

ஆவிக்குரிய வளர்ச்சி சிலரில் மிகவும் மெதுவாகவும், வேறு சிலரில் மிகவும் மகிமையாக வேகமாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஏனென்றால், சிலர் தேவனை உதைக்கிறார்கள், அவரிடம் கேள்வி கேட்கிறார்கள் அல்லது அவருடன் வாக்குவாதம்செய்கிறார்கள். அவர்கள் காரியத்தைச் சுற்றிசுற்றி வந்து, "இதன் பொருள் இதுதானா? நான் இதைச் செய்ய வேண்டுமா? இது தேவைதானா? நான் இதைச் செய்யலாமா? நான் இதைச் செய்யக்கூடுமா?" என்று பலவாறாகக் கேள்விகேட்கிறார்கள். இருந்தபோதும், தாங்கள் தேவனுடைய சித்தத்தை மட்டும்தான் விரும்புவதாக இந்த மக்கள் மிகவும் சத்தமாகக் கூறுகிறார்கள். ஆனால், அவர்களுக்குள் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது என்றும், அவர்களுடைய வளர்ச்சியில் அதிகமான உராய்வுக்கான மூலகாரணங்கள் இருக்கின்றன என்றும் அவர்களுடைய நடத்தையும் பேச்சும் உறுதிப்படுத்துகின்றன.

வேறு சிலர் உடனடியாக ஆவியின் உத்தமத்தோடும், தூய்மையோடும் கர்த்தரிடத்தில் போகிறார்கள்; எனவே, தம்முடைய சித்தத்துக்கு எதிரான எந்தக் கருத்துமாறுபாடும் இல்லாமல் காலத்தை வீணாக்காமல் தேவனால் அவர்களை முன்னோக்கி நடத்திச்செல்ல முடிகிறது. அங்கு முழுமையாகத் தன்னை விட்டுக்கொடுக்காததாலும், முழு இருதயத்தோடு கீழ்ப்படியாததாலும், அந்தச் சித்தத்துக்கு சரணடையாததாலும் வருகிற எந்தப் பலவீனுமும் இல்லை. அங்கு கர்த்தர்மேல் மிகுந்த பேரார்வம் இருக்கிறது; என்ன நடந்தாலும் சரி, அவர் தம் சித்தத்தை நிறைவேற்ற அவருக்கு முழுச் சுதந்திரம் இருக்கிறது.

இவையெல்லாம் கர்த்தராகிய இயேசுவை நாம் எந்த அளவுக்குப் பாராட்டுகிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது. நாம் அவருடைய உண்மையான மதிப்பை அறிந்து, அவர் நமக்காகப் பிதாவானவருக்கு என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அதைப் பார்த்து, விசுவாசத்தால் அவரைச் சொந்தமாக்கிக் கொள்ளும்போது, நாம் அமைதியாக வளர்கிறோம்—"...கர்த்தரைக் கண்டு அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (உள்ளிருந்து மாற்றம்படுகிறோம்)" (2 கொரி. 3:18).

காரியங்களை கர்த்தராகிய இயேசு என்ற நபரிலிருந்து தனியாகப் பிரித்துப்பார்ப்பதுதான் வளர்ச்சிக்கான தடையாகும். அவருடைய முழு மதிப்பும் நமக்குத் தெரிந்தால், எல்லா மகிமையையும் அவரே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்மேல் நமக்குப் பேராவல் இருந்தால், நாம் இதைச் செய்யலாமா செய்யக்கூடாதா என்று சில நேரங்களில் வாதாடுவதுபோல வேதவாக்கியங்களைச் சுற்றிச்சுற்றி நாம் ஒருபோதும் நடக்கமாட்டோம்; அதற்கு மாறாக, கிறிஸ்துவே இன்னும் அதிகமான மகிமையைப் பெறும்படிக்கு நாம் உடனடியான விட்டுக்கொடுப்போம்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் அம்சங்களைத் தனியாகப் பிரித்து, அவைகளை ஏதோவொன்றாகக் கருதுவதில்தான் பெரும்பாலும் பிரச்சினை இருக்கிறதல்லவா?

கர்த்தராகிய இயேசுவைப் போதுமான அளவுக்கு மதித்துப்பாரட்டும்போது, அது ஆவிக்குரிய வளர்ச்சியிலுள்ள எல்லாச் சிரமத்தையும் நீக்கிவிடுகிறது. எந்த இருதயத்தில் கிறிஸ்து மிக அதிகமாக இருக்கிறாரோ, அந்த இருதயத்தில் கிறிஸ்து மிக அதிகமாக மகிமைப்படுத்தப்படுகிறார். வளர்ச்சி நேசருக்குள் பொதிந்துவைக்கப்பட்டிருக்கிறது; வளர்ச்சி எல்லாவற்றிலும் கர்த்தராகிய இயேசுவுக்கு அவருக்குரிய இடத்தைக் கொடுத்து, அவரால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதின் விளைவாகும்; அவரே ஆதியாக இருக்கிறார், அவரே எல்லாமாக இருக்கிறார், எல்லாவற்றிலும் இருக்கிறார். முடிவாகச் சொல்வதானால், இது கிறிஸ்துவின் அளவைப்பற்றிய காரியமாகும். *எல்லாம்* கர்த்தராகிய இயேசுவுக்குள் பொதிந்துவைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

எல்லாமே கர்த்தரை நம் இருதயங்களில் அறிவதைப்பற்றிய காரியமாகும்; அப்போது கர்த்தருக்கு நம்மிலும், நம்மூலமாகவும் தெளிவான வழி கிடைக்கும்.

உங்களுடைய முழுக் கவனத்தையும் அவர்மேல் குவித்துவிடுங்கள்; அவரே எல்லாம் என்பதைப் பாருங்கள்.

அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்கப்படுவதற்காகவே, "கிறிஸ்துவினுடைய அளவின்" நிறைவான வளர்ச்சியை எட்டுவதற்காகவே, "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக் குத்தக்க பூரணபுருஷராக" ஆவதற்காகவே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதே தேவனுடைய சுவிசேஷம் (எபே.4:11).